09.02.2026 OS.No.65/2015 DW2 Name :.**மோகன்**

குறுக்கு விசாரணை

1. லட்சுமணன் சொல்லிதான் நான் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன். 2022ல் அவர் என்னிடம் சாட்சியம் சொல்ல கூறினார். லட்சுமணன் வீட்டிலிருந்து என்னுடைய வீடு சுமார் 1கி.மீ தொலைவில் உள்ளது. நான் இருக்கும் ஊர் விண்ணமங்கலம் ஊராட்சி லட்சுமணன் குடியிருப்பது நாச்சார் குப்பம் ஊராட்சி ஆகும். நாச்சார் குப்பத்திலிருந்து தாவா சொத்து சுமார் 13 கி.மீ தொலைவில் உள்ளது. நாச்சர் குப்பத்தில் லட்சுமணன் செட்டிலாகி சுமார் 50 ஆண்டுகள் ஆகிறது. திருமணத்திற்கு பின்னர் அவர் அங்கு வந்துவிட்டார்.
2. நீதிமன்றத்திற்கு வந்துள்ள லட்சுமணனின் மனைவி எனக்கு தூரத்து உறவுமுறையில் எனக்கு அக்கா ஆகிறார். 1 ஏக்கர் 28 செண்ட் விஸ்தீரண சொத்திற்கு நான் சாட்சி சொல்லும் வழக்கு நடக்கிறது. அ.வ. எண். 12/2017 வழக்கின் சொத்து விஸ்தீரணம் எனக்கு தெரியாது. லட்சுமணன் திருமணத்திற்கு முன்பே எனக்கு நன்றாக தெரியும். லட்சுமணனுக்கு வில்வநாதன், விஸ்வநாதன் என்ற இரண்டு மகன்கள் உள்ளனர் என்ற விவரம் தெரியுமா என்றால் பெருமாள், விஸ்வநாதன் என்ற இரண்டு மகன்கள் தான் அவருக்கு உள்ளார்கள்.
3. லட்சுமணனுக்கு பெண்வாரிசுகள் யாரும் இல்லை. 35 லிருந்து 41 வரையிலான பிரதிவாதிகள் யார்யார் என்று எனக்கு தெரியாது. லட்சுமணனின் மனைவி பெயர் கம்சலா. லட்சுமணனுக்கு 36, 40, 41 பிரதிவாதிகள் ஆண்வாரிசுகள் என்றால் இரண்டு நபர்கள் மட்டும்தான்

அவருடைய ஆண்வாரிசுகள். லட்சுமணன் குடும்பத்தில் உள்ள தமிழரசி, கலைவாணி மற்றும் சபரீன் ஆகியோர்கள் லட்சுமணனின் பேரன், பேத்திகள் ஆவார்கள். தமிழரசியின் கணவர் பெயர் ராஜா. கலைவாணியின் கணவர் பெயர் என்னவென்றால் அவருக்கு திருமணம் ஆகவில்லை.

4. சபரீன் என்பவரின் கணவர் பெயர் என்னவென்றால் சபரீன் பெயரே அருண் ஆகும். சபரீன் என்பவர் பெண் என்றால் சரிதான். அவர் இஸ்லாமிய மதத்தை சார்ந்தவரை திருமணம் செய்துக்கொண்டு அவருடைய கணவர் பெயர் நூருல்லா பாஷா என்றால் உண்மைதான். சபரீன் என்பவர் பெயர் அருண் என நான் முதலில் கூறியது தவறு கிடையாது. லட்சுமணன் குடும்பத்தில் பெரியவர் கோவிந்தன், அடுத்த நபர் பாலகிருஷ்ணன் அதற்கு அடுத்த லட்சுமணன் ஆவார்கள்.
5. பெண்வாரிசுகள் மொத்தம் 5 நபர்கள். ரீட்டா, பாத்தீமா ஆகியோர்கள் பெயரில் பாலகிருஷ்ணன் எழுதிகொடுத்துள்ள கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யபட்ட கிரைய பத்திரத்தையும் நான் பார்த்தது கிடையாது. அவ்வாறு கொடுத்துள்ள ஆவணங்கள் சட்டபடி தவறானது ஆகும். ஆவணங்களில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. பாலகிருஷ்ணன் இறப்பதற்கு சுமார் 15, 16 நாட்கள் கபீல் மருத்துவனையில் சிகிச்சையில் இருந்தார்.
6. தாவா சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியும். லட்சுமணன் அவருடைய பாக சொத்தை பாலகிருஷ்ணனுக்கு 02.04.1987ல் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அவ்வாறு எதுவும் கொடுக்கவில்லை. என்னுடைய அக்கா

கம்சலாவிற்காக சில விவரங்களை பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 09/02/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.02.09 17:19:01 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.